பெருநகர சென்னை மாநகராட்சி
தேர்தல் செய்தி வெளியீடு

தே.செ.வெ.எண். 17 நாள்: 26.03.2019

**சென்னை மாவட்டத்தில் அனைத்து தொகுதிகளிலும் பயன்படுத்தக்கூடிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்டமாக கணினி மூலம் குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படியும், தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அலுவலர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் அறிவுரையின்படியும், சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய 3 பாராளுமன்ற தொகுதிகள் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலிலும் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கணினி மூலம் முதல்நிலை தெரிவு செய்தல் 25.03.2019 அன்று ரிப்பன் மாளிகையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் முன்னிலையில் நடைபெற்றது.

சென்னை மாவட்டத்தில் உள்ள 3,754 வாக்குச்சாவடிகள் மற்றும் 72 துணை வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தவுள்ள 10,791 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 5,298 கட்டுப்பாட்டு கருவிகளும், 6,548 VVPAT இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன. இதில் முதற்கட்டமாக எந்தெந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு எந்தெந்த வாக்குப்பதிவு இயந்திரங்கள் என கணினி மூலம் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டது.

இந்நிகழ்வின்போது, மேற்படி தெரிவு செய்த வாக்குப்பதிவு இயந்திரங்களின் விவரங்களடங்கிய குறுந்தகடு ஒன்று அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.ஏ.பெருமாள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி